FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூலை - 2019**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, July - 2019**

| தரம் :- 12 (2020) | தமிழ் | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

❖ **பகுதி I இல் மூன்று வினாக்களுக்கும் பகுதி II இல் 'அ' பிரிவில் ஒரு வினாவுக்கும் 'ஆ' பிரிவில் ஒரு வினாவுக்குமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி I

1) **மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

அ. வாரலெஞ் சேரி தாரனின் றாரே
அலரா கின்றாற் பெரும காவிரிப்
பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த
ஏந்துகோட் டியானைச் சேந்தன் தந்தை
அரியலம் புகலி னந் தோட்டு வேட்டை
நிரைய வொள்வா ளிளையர் பெருமகன்
அழுசி யார்க்கா டன்ன விவன்
பழுதீர் மாணலம் தொலைவன கண்டே

i. இப்பாடலின் பொருளை இக்கால மொழி நடையில் எழுதுக.
ii. இப்பாடலில் தோழி பாத்திரம் பெறும் முக்கியத்துவத்தினைத் தெளிவு படுத்துக.
iii. இச்செய்யுளில் கையாளப்பட்டுள்ள உவமையணியின் பொருத்தப்பாட்டை விளக்குக.
(04 + 03 + 03 = 10 புள்ளிகள்)

agaram.lk

ஆ. கார் எனக் கடிது சென்றான் கல்லிடைப்படுத்த புல்லின்
வார் சிலைத் தடக்கை வள்ளல் வைகிய பள்ளி கண்டான்.
பார் மிசைப் பதைத்து வீழ்ந்தான் பருவரற் பரவை புக்கான்
வார் மணிப் புனலால் மண்ணை மண்ணுநீர் ஆட்டும் கண்ணான்

i. இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.
ii. இச்செய்யுளில் கையாளப்பட்டுள்ள உவமைகளை எடுத்துக் காட்டி விளக்குக.
iii. இச்செய்யுளின் வாயிலாக விளங்கிக் கொள்ளக் கூடியவை யாவை?
( 03 + 03 + 04 = 10 புள்ளிகள்)

2) **மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

1. பின்வருவனவற்றுள் உடம்படுமெய்யாக வரக்கூடிய எழுத்து.
1) ங் 2) ச் 3) ண் 4) ய் 5) ம் (..........)

2. பின்வருவனவற்றுள் குற்றியலுகரமாக அமையாதது.
1) சங்கு 2) அன்பு 3) யாது 4) வாழ்வு 5) புரியாது (..........)

3. பின்வருவனவற்றுள் வேற்று நிலை மெய்ம்மயக்கமும் உடனிலை மெய்ம்மயக்கமும் இடம் பெற்ற சொல்.
1) வீழ்ந்தான் 2) வாழ்க்கை 3) சூரியக்கதிர்
4) சித்தரித்தான் 5) முற்றுப் பெற்றது. (..........)

4. பின்வருவனவற்றுள் பகுதி இரட்டித்துக் காலம் காட்டிய சொல்.
   1) பெற்றான்  2) புகழ்ந்தான்  3) வரைந்தான்
   4) கூடினார்கள்  5) செதுக்கினான்  (..........)

5. பின்வருவனவற்றுள் கூட்டுப் பெயராக அமைவது,
   1) நீரேரி  2) மலர்ச்சி  3) வேலைக்காரன்
   4) தமிழியல்  5) அறிவாளி  (..........)

6. பலத்த முழக்கத்தோடு மழை பெய்தது. இங்கு இடம் பெற்றுள்ள வேற்றுமைப் பொருள்.
   1) கருவி  2) கருத்தா  3) உடனிகழ்ச்சி  4) நீங்கல்  5) கிழமை  (..........)

7. பின்வருவனவற்றுள் செயற்படுபொருள் குன்றாத வினை.
   1) அவன் விரைவாக எழுந்தான்  2) அவன் கவனமாகப் படித்தான்
   3) அவன் வேகமாக ஓடினான்  4) அவன் பலமாகச் சிரித்தான்
   5) அவன் நிதானமாக நடந்தான்.  (..........)

8. பின்வருவனவற்றுள் உருபு இன்றி பெயர் ஈறு திரிபடைவதன் மூலம் உணர்த்தப்படும் வேற்றுமை.
   1) இடவேற்றுமை  2) உடைமை வேற்றுமை  3) எழுவாய் வேற்றுமை
   4) விளி வேற்றுமை  5) கருவி வேற்றுமை  (..........)

9. பின்வருவனவற்றுள் பொது வினையாக அமைவது,
   1) படி  2) எடு  3) சிரி  4) நட  5) நனை  (..........)

10. பின்வருவனவற்றுள் வினையடையாக அமைந்த சொல்.
   1) அழகான  2) அழகிய  3) அழகாக  4) அழகுள்ள  5) அழகற்ற  (..........)

**3) பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.**

agaram.lk

அ) இலக்கியமும் பண்பாடும்
ஆ) ஊடகங்களின் தமிழ்ப்பணி
இ) மனித வாழ்வில் இறைநம்பிக்கை
ஈ) தமிழ் உரைநடை வளர்ச்சியில் ஆறுமுக நாவலரின் பங்களிப்பு
உ) யாதும் ஊரே யாவரும் கேளிர்.

## பகுதி II
## 'அ' பிரிவு

4) திருவள்ளுவர் 'பெரியாரைத் துணைக்கோடல்' என்ற அதிகாரத்தில் கூறுவனவற்றை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றைத் தெளிவு படுத்துக.

அ) துணையாகக் கொள்வோரிடம் காணப்பட வேண்டிய பண்புகள்.
ஆ) பெரியாரைத் துணைக்கோடலின் சிறப்பு.
இ) பெரியாரைத் துணைக்கோடலின் பயன்.
ஈ) பெரியாரைத் துணையாகக் கொள்ளாமையின் குற்றம்.

5) பேராசிரியர் க.கைலாசபதியின் 'மானுடம் தழுவிய கவிஞர்கள்' என்னும் கட்டுரையின் அடிப்படையில் பின்வருவனவற்றை விளக்குக.

அ) மகாகவிகள் என்பதற்கான கட்டுரை ஆசிரியரின் வரையறை.
ஆ) வள்ளுவர், கம்பன், இளங்கோ, பார ஆகியோர் மகாகவிகள் என மதிக்கப்படுவதற்கு ஆசிரியர் கூறும் நியாயப் பாடுகள்.
இ) பாரதியார் பற்றிய ஆசிரியரின் மதிப்பீடு.  (20 புள்ளிகள்)

6) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

அ) அமலனாதிபிரான் பதிகத்தில் குறிப்பிடப்படும் புராண இதிகாசச் செய்திகள்.
ஆ) பெண் விடுதலை என்ற கவிதையில் பெண்ணுரிமைக் கருத்துக்கள்.
இ) தேம்பாவணி காட்சிப் படலத்தில் குழந்தை இயேசுவைக் கண்ட இடையர்களின் நிலை.
ஈ) ‘ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது’ என்ற நாவலில் கிராமியப் பண்பாடுகள்.
உ) ‘பாரதியார்’ என்ற கவிதையில் பாரதியார் பாடல்களின் சிறப்புக்கள்.

**‘ஆ’ பிரிவு**

7) சோழர் காலத்தில் எழுந்த

அ) இலக்கியங்களை வகைப்படுத்துக.
ஆ) அவற்றின் பண்புகளைத் தெளிவுபடுத்துக.
இ) ‘சோழர் காலம் காவிய காலம்’ என்பது பற்றிக் கருத்துரைக்குக.

8) இலங்கையில் ஆரியச்சக்கரவர்த்திகள் காலப்பகுதியில் எழுந்த,

அ) வைத்திய நூல்கள்
ஆ) பொதுமக்கள் சார் இலக்கியங்கள்.
இ) புராணங்கள்.
என்பன குறித்து விபரிக்குக.

agaram.lk